# மேற்காசிய அமைதிக்கு இந்தியா முழு ஆதரவு

## ஐக்கிய அரபு அமீரகத்தில் பிரதமர் மோடி உறுதி

அபு தாபி, மே 15: மேற்காசியாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைந்து நிலைநாட்ட சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் (யுஏஇ) தலைநகர் அபு தாபியில் அந்நாட்டு அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யான் உடனான சந்திப்பின்போது பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய 4 ஐரோப்பிய நாடுகளுக்கு பிரதமர் மோடி 6 நாள்கள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதல்கட்டமாக, ஐக்கிய அரபு அமீரகத்துக்கு அவர் வெள்ளிக்கிழமை வந்தடைந்தார். அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே கடந்த பிப்ரவரி 28-இல் போர் மூண்ட பிறகு மேற்காசிய பிராந்தியத்துக்கு அவர் பயணிப்பது இதுவே முதல்முறையாகும்.

ஹோர்முஸ் நீரிணை முடக்கம் உள்பட மேற்காசிய போரின் தாக்கங்கள், கச்சா எண்ணெய் உற்பத்தி கொள்கைகள் தொடர்பாக வளைகுடா நாடுகள் இடையே அதிகரித்துவரும் கருத்து வேறுபாடுகள், இஸ்ரேல்-ஈரான் பிரச்னையில் அணிசேரும் பிராந்திய நாடுகள் என மாறிவரும் உலகளாவிய அரசியல் சூழலுக்கு மத்தியில் பிரதமர் மோடியின் ஐக்கிய அரபு அமீரக பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அபு தாபி விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமரை ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யான் நேரில் வரவேற்றார். பின்னர், எரிசக்தி, முதலீடு, விநியோகச் சங்கிலி, நீலப் பொருளாதாரம், நிதிசார் தொழில்நுட்பம், மக்கள் ரீதியிலான தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இருதரப்பு விரிவான உத்திசார் கூட்டுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், மேற்காசிய நிலவரம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

வளைகுடா பிராந்தியத்தில் அதிகரிக்கும் ஸ்திரமின்மையால் கச்சா எண்ணெய் விநியோகம் மற்றும் கடல்சார் வர்த்தக வழித்தடங்களில் இடையூறுகள் நிலவும் சூழலில், எரிசக்தி பாதுகாப்பு குறித்து இருவரும் முக்கியமாக ஆலோசித்தனர்.

**தாக்குதல்களுக்கு கண்டனம்:** அமெரிக்காவின் முக்கிய ராணுவ தளத்தைக் கொண்டுள்ளதால், ஐக்கிய அரபு அமீரகம் ஈரானின் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகிறது. இதைக் குறிப்பிட்டுப் பேசிய பிரதமர் மோடி, 'ஐக்கிய அரபு அமீரகம் குறிவைக்கப்படும் விதம் கண்டனத்துக்குரியது. தற்போதைய சூழலை ஐக்கிய அரபு அமீரகம் நிதானத்துடன் எதிர்கொள்வது பாராட்டுக்குரியது.

மேற்காசிய போரின் தாக்கம் உலக அளவில் உணரப்பட்டு வருகிறது. இந்தப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைந்து நிலைநாட்ட சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது.

ஹோர்முஸ் நீரிணையில் கப்பல்களின் பாதுகாப்பான, தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது. இது, பிராந்திய பாதுகாப்பு-ஸ்திரத்தன்மை, எரிசக்தி, உணவுபாதுகாப்புக்கு மிக அவசியம்' என்றார்.

அண்மையில் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள் (ஒபெக்) கூட்டமைப்பில் இருந்து ஐக்கிய அரபு அமீரகம் விலகியது. இதன்மூலம் ஒபெக் கூட்டமைப்பில் ஏற்பட்டுள்ள விரிசல்கள் அம்பலமாகின. தனது சுதந்திரமான எரிசக்தி கொள்கையை வகுக்க ஐக்கிய அரபு அமீரகம் முயற்சித்துவரும் நிலையில், அந்நாட்டு அதிபரை பிரதமர் மோடி சந்தித்திருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.



அபுதாபியில் ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானை வெள்ளிக்கிழமை சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி.

## பிரதமர் மோடியின் விமானத்தை பாதுகாத்த யுஏஇ போர் விமானங்கள்!

பிரதமர் மோடியின் விமானம் ஐக்கிய அரபு அமீரக வான்வெளிக்குள் நுழைந்தவுடன் அந்நாட்டின் எஃப்-16 போர் விமானங்கள் இருபுறமும் பறந்து பாதுகாப்பளித்தன. இது, சிறப்புக்குரிய நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

அதிபர் ஷேக் முகமது பின் சையத் உடனான சந்திப்பின்போது இதைக் குறிப்பிட்ட பிரதமர், 'உங்களின் விமானப் படை எனக்கு பாதுகாப்பு வழங்கிய விதம், இந்திய மக்களுக்கு கிடைக்கப் பெற்ற கௌரவமாகும். சில நாள்களுக்கு முன் உங்களுடன் தொலைபேசியில் உரையாடினேன். நேரில் சந்திக்க ஆவலுடன் இருந்தேன். இப்போது சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி' என்றார்.

## எரிசக்தி, பாதுகாப்பு ஒப்பந்தங்கள் கையொப்பம்: ரூ.47,870 கோடி முதலீடு அறிவிப்பு

பிரதமர் மோடி- ஐக்கிய அரபு அமீரக அதிபர் இடையிலான சந்திப்புக்குப் பின் எரிசக்தி, பாதுகாப்பு உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புக்கான 7 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. முதலீட்டுத் துறை ஒத்துழைப்பின்கீழ், இந்தியாவில் 500 கோடி டாலர் (ரூ.47,870 கோடி) முதலீடுகளுக்கு ஐக்கிய அரபு அமீரகம் தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உத்தி ரீதியிலான பெட்ரோலிய கையிருப்பை பராமரிக்கும் பொறுப்புள்ள பொதுத் துறை நிறுவனமான இந்திய உத்திசார் பெட்ரோலிய கையிருப்பு நிறுவனம் மற்றும் அபுதாபி தேசிய பெட்ரோலிய நிறுவனம் இடையே வியூக ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

எரிசக்தி பாதுகாப்பை நோக்கமாகக் கொண்ட இந்த ஒப்பந்தம், இந்தியாவின் பெட்ரோலிய கையிருப்பில் ஐக்கிய அமீரகத்தின் பங்களிப்பை 30 மில்லியன் பீப்பாய்களாக உயர்த்துவதுடன், திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) மற்றும் திரவ பெட்ரோலிய எரிவாயு (எல்பிஜி) சேமிப்பு வசதிகளில் திறன்மிக்க ஒத்துழைப்புக்கும் வழிவகுப்பதாகும்.

இதுதவிர இந்தியாவில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயுவான எல்பிஜி-யின் நீண்ட கால விநியோகம், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் எரிசக்தி பாதுகாப்பை மையமாகக் கொண்டு மற்றொரு ஒப்பந்தமும் கையொப்பமிடப்பட்டது.

இருதரப்பு பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு, புத்தாக்கங்களை ஊக்குவித்தல், தொழில்நுட்பப் பகிர்வு, தேசிய-பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட உத்திசார் பாதுகாப்பு ஒத்துழைப்பைக் கட்டமைக்கும் ஒப்பந்தமும் கையொப்பமானது. கப்பல் துறை, அதிநவீன தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்களும் கையொப்பமாகின.

இந்தியாவின் மூன்றாவது பெரிய வர்த்தகக் கூட்டாளியாக உள்ள ஐக்கிய அரபு அமீரகம், 7-ஆவது பெரிய முதலீட்டு நாடாகும். சுமார் 45 லட்சம் இந்தியர்கள், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்கரைப் பகுதிகளில் குப்பையை அகற்ற மாநகராட்சி ஆணையர் தலைமையில் குழு

## பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவு

**சென்னை, மே 15:** சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலை கடற்கரைப் பகுதிகளில் உள்ள குப்பைகள், கழிவுகளை அகற்ற மாநகராட்சி ஆணையர் தலைமையில் குழு அமைத்து தென்மண்டல பசுமைத் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

சென்னை காசிமேட்டில் மீன்பிடி துறைமுகம் உள்ளது. இதில் 2,000 விசை படகுகள், 7,700 ஃபைபர் படகுகள், 500 கட்டுமரங்கள் என 3,000-க்கும் அதிகமானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். காசிமேடு முதல் எண்ணூர் வரையிலான கிழக்கு கடற்கரைப் பகுதிகள் அண்மைக் காலமாக நெகிழி, தெர்மாகோல் உள்ளிட்ட கழிவுகள் அதிக அளவில் தேங்கி குப்பைக் களமாக மாறியுள்ளன.

இதனால் கடற்கரைப் பகுதிகள் பாதிக்கப்படுவதுடன், கடல்வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியானது.

இந்த செய்தியின் அடிப்படையில் தென் மண்டல பசுமைத் தீர்ப்பாயம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இந்த வழக்கு பசுமைத் தீர்ப்பாய உறுப்பினர் புஷ்பா சத்தியநாராயாணா, தொழில்நுட்ப உறுப்பினர் சத்யகோபால் கோர்லபதி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த தீர்ப்பாய உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட கடற்கரைப் பகுதிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில், மீனவர் நலத் துறை இயக்குநர், சென்னை துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர், காசிமேடு மீன்பிடி துறைமுக மேலாளர் ஆகியோர் அடங்கிய கூட்டுக் குழுவை அமைத்து உத்தரவிட்டனர்.

இந்தக் குழு, எண்ணூர், காசிமேடு மட்டுமன்றி, கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள கடற்கரைப் பகுதி முழுவதும் தேங்கியுள்ள குப்பைக்கழிவுகளை மீன்பிடித் தடைக்காலம் முடிவடையும் ஜூன் 14-ஆம் தேதிக்குள் அகற்ற வேண்டும் என உத்தரவிட்டனர்.

மேலும், சென்னை துறைமுக வளாகம், கடற்கரைப் பகுதிகளில் குப்பை கொட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் தெர்மாகோல் பெட்டிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், அடையாறு, கூவம் ஆறுகளில் இவை கொட்டப்படுவதைத் தவிர்க்க வேண்டும். இந்த உத்தரவை செயல்படுத்தியது குறித்து மாநகராட்சி ஆணையர் தலைமையிலான குழு விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணையை ஜூன் 3-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்வு

## 4 ஆண்டுகளுக்குப் பிறகு அதிகரிப்பு



**புதுதில்லி,மே 15:** பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலையை எண்ணெய் நிறுவனங்கள் வெள்ளிக்கிழமை லிட்டருக்கு ரூ. 3 அளவுக்கு உயர்த்தின. வாகனங்களுக்கான அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (சிஎன்ஜி) விலை கிலோவுக்கு ரூ. 2 வீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்காசிய போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், சுமார் 4 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு காரணமாக சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.3.14 உயர்ந்து ரூ.103.98 ஆகவும், டீசல் விலை ரூ.3.11 உயர்ந்து ரூ.95.50 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. சிஎன்ஜி விலை கிலோ ரூ. 91.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தலைநகர் தில்லியில் பெட்ரோல் விலை லிட்டர் ரூ. 94.77-லிருந்து 97.77-ஆக உயர்ந்துள்ளது. டீசல் விலை லிட்டருக்கு ரூ. 87.67-லிருந்து ரூ. 90.67-ஆக உயர்ந்துள்ளது. சிஎன்ஜி கிலோ ரூ. 79.09-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

உள்ளூர் வரி, மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட காரணங்களால் பெட்ரோல், டீசல் மற்றும் சிஎன்ஜி விலை மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடும்.

முன்னதாக, கடந்த 2022-ஆம் ஆண்டு ஏப்ரலில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. அதன் பிறகு மாற்றமின்றி விற்கப்பட்டு வந்த நிலையில், மக்களவைத் தேர்தலுக்கு சற்று முன்பாக கடந்த 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ. 2 வீதம் குறைக்கப்பட்டது. தற்போது மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது.

இது குறித்து எண்ணெய் நிறுவனங்கள் தரப்பில் கூறுகையில், 'சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலையுடன் ஒப்பிடும் போது, குறைவான அளவிலேயே பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வுக்குப் பிறகும் பெட்ரோல் மீது லிட்டருக்கு ரூ.11 வீதமும், டீசல் மீது லிட்டருக்கு ரூ. 39 வீதமும் எண்ணெய் நிறுவனங்களுக்கு இழப்பு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்காசிய நெருக்கடியின் பின்னணியில், உலகளாவிய எரிபொருள் விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால், பெட்ரோல்-டீசல்-எரிவாயு போன்ற பெட்ரோலியப் பொருள்களை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி அண்மையில் வேண்டுகோள் விடுத்தார்.

மேற்காசிய போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட தட்டுப்பாட்டால் வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலை அவ்வப்போது உயர்த்தப்பட்டு வருகிறது. வீட்டு உபயோக சமையல் எரிவாயு விலையும் அண்மையில் உயர்த்தப்பட்டது.

பெட்ரோல்,டீசல் விலை மட்டும் உயர்த்தப்படாமல் இருந்தது. தமிழகம், மேற்கு வங்கம், கேரளம் உள்பட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களைக் கருத்தில்கொண்டே விலை உயர்த்தப்படவில்லை; தேர்தலுக்குப் பிறகு பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட வாய்ப்புள்ளது என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்துவந்த நிலையில், இப்போது விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

# சென்னை ஐஐடி–யில் மே 18–இல் ஏஐ, தரவு அறிவியல் ஆய்வுக் கண்காட்சி

**சென்னை, மே 15:** செயற்கை நுண்ணறிவு (ஏஐ), தரவு அறிவியல் ஆய்வுகளில் அண்மை முன்னேற்றங்களை காணும் வகையில் சென்னை ஐஐடி–யின் வாத்வானி தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவுப் பள்ளி, 100–க்கும் மேற்பட்ட ஆய்வுகளை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்த உள்ளது.

இந்த ஆய்வுக் கண்காட்சி சென்னை ஐஐடி வளாகத்தில் மே 18 நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக சென்னை ஐஐடி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஆய்வாளர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், துறைசார் வல்லுநர்கள் ஆகியோர் உருவாக்கியுள்ள இந்த ஆய்வுக் கண்காட்சியில், உருவாக்கும் ஏஐ, பொது ஏஐ, வலுவூட்டல் கற்றல், இயந்திரக் கற்றல், கணினிப் பார்வை, கணக்கீட்டு உயிரியல், பொறுப்புமிக்க ஏஐ ஆகிய துறைகளில் அதிநவீன ஆய்வுகளை ஆராய்வதற்கான களம் அமைத்துத் தரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆய்வுக் கண்காட்சியில் பங்கேற்க விரும்பும், பிற கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆய்வு அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் இணைய வழியில் பதிவு செய்து பங்கேற்கலாம்.

சென்னை ஐஐடியின் வாத்வானி தரவு அறிவியல் ஏஐ பள்ளி 2024–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, இது தரவு அறிவியல் மற்றும் ஏஐ–இன் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர்களை ஒன்றிணைத்து, சமூகத்துக்கு நேரடிப் பயன்மிக்க மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் இணைந்து பணியாற்றப்படுவதாக இந்தப் பள்ளியின் தலைவர் பல்ராம் ரவீந்தரன் தெரிவித்தார்.

# காலத்துக்கு ஏற்ப ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்த வேண்டும்

## பிரிக்ஸ் கூட்டத்தில் இந்தியா வலியுறுத்தல்

**புது தில்லி, மே 15:** தற்கால உலகுக்கு ஏற்ப ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்த வேண்டும் என்று பிரிக்ஸ் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா வெள்ளிக்கிழமை வலியுறுத்தியது.

புது தில்லியில் பிரிக்ஸ் அமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டம் 2 நாள்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தின் நிறைவு நாளான வெள்ளிக்கிழமை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பேசியதாவது:

சர்வதேச நிர்வாகம், பன்முகத் தன்மையின் நம்பகத்தன்மை ஆகியவை அதிக பகுப்பாய்வுக்கு உள்ளாகியுள்ள இந்தக் காலகட்டத்தில், இக்கூட்டம் நடைபெறுகிறது. ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகள் உருவாக்கப்படும்போது இருந்ததைவிட உலக நாடுகளிடையேயான தொடர்புகள், பிரச்னைகள் தற்போது அதிகரித்துள்ளன. ஆனால், இந்த மாற்றத்துக்கு ஏற்றவாறு முன்பு ஏற்படுத்தப்பட்ட சர்வதேச நிர்வாகத்தின் அமைப்புகளின் செயல்பாடு தற்போது இல்லை.

ஐ.நா. சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் ஐ.நா.வின் பொறுப்புகளும் கூடியுள்ளது. எனினும், ஐ.நா.வின் முக்கிய அமைப்புகள், குறிப்பாக பாதுகாப்பு கவுன்சில், பழைய காலத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது. ஆதலால் காலத்துக்கு ஏற்ற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உள்ளிட்டவற்றில் மாற்றம் செய்யப்பட வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர மற்றும் தற்காலிக உறுப்பினர்கள் நிலை உள்ளிட்ட அனைத்திலும் அர்த்தமுள்ள சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையெனில் ஐ.நா.வின் நம்பகத்தன்மையும், செயல்படும் விதமும் பாதிக்கப்படும்.




புது தில்லியில் பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டியது அவசியமாகும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் செய்யப்படுவது குறித்து தீவிரமாக விவாதிக்க வேண்டிய நேரம் வந்துள்ளது. இதுகுறித்து பிரிக்ஸ் அமைப்பும் தீவிரமாக விவாதித்துள்ளது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் போல சர்வதேச நிதிக் கட்டமைப்பிலும் சீர்திருத்தம் செய்யப்படுவது அவசியமாகும். அந்தச் சீர்திருத்தம், நிகழ்கால பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். இதில் விநியோகச் சங்கிலி, உணவுப் பொருள்கள், எரிசக்தி பாதுகாப்பு ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்பு, முக்கிய வளங்களைப் பயன்படுத்துவதில் நிலவும் ஏற்றத்தாழ்வு ஆகியவையும் அடங்கும். மேலும், பன்முக வர்த்தக அமைப்பு வலுப்படுத்தப்படுவதோடு, அதில் சீர்திருத்தமும் செய்யப்பட வேண்டும் என்றார் ஜெய்சங்கர்.

பிரிக்ஸ் அமைப்பில் பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், எத்தியோப்பியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பில் தற்போது இந்தியா உள்ளது. இந்த அமைப்பின் அடுத்த உச்சி மாநாடு, இந்தியாவில் வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இதையொட்டி, புது தில்லியில் 2 நாள்கள் பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.